## 100 நாள் வேலைத் திட்டத்தில் தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# காஞ்சி வடக்கு மாவட்டத்தில் உள்ள 10 ஒன்றியங்களில் 19 இடங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு !



100 நாள் வேலைத் திட்டத்தில் தமிழ்நாட்டிற்குத் தர வேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.கழகத்தின் சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் வரும் 29.3.2025 சனிக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் ”மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டும் என்று தலைமைக் கழகம் அறிவித்தவாறு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 10 ஒன்றியங்களில் 19 இடங்களில் கீழ்க்கண்ட இடங்களில், கீழ்க்கண்ட விவரப்படி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற உள்ளது.

| ஒன்றியம் | ஆர்ப்பாட்டம் நடைபெறும் ஊராட்சி – இடம் | தலைமை | ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்கும் ஊராட்சிகள் |
|---|---|---|---|
| குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் | பரணிபுத்தூர் – ஜோதி நகர் சந்திப்பு | தலைமை:– டி.ஆர்.பாலு, எம்.பி., கழகப் பொருளாளர் வரவேற்புரை:– ஏ.வந்தே மாதரம் ஒன்றியச் செயலாளர் | அய்யப்பன்தாங்கல், பரணிபுத்தூர், மௌலிவாக்கம், கொளப்பாக்கம், கெருகம்பாக்கம், கோவூர், பெரியபணிச்சேரி, தண்டலம், தரப்பாக்கம், இரண்டாம்கட்டளை |
| புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியம் | பொழிச்சலூர் – பேருந்து நிலையம் அருகில் | இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஜி.கே.ரவி ஒன்றியச் செயலாளர் | பொழிச்சலூர், திரிசூலம், மூவரசம்பட்டு, கவுல்பஜார் |
| புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியம் | முடிச்சூர் – லட்சுமி நகர் பேருந்து நிலையம் | எஸ்.ஆர்.ராஜா தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் | முடிச்சூர், திருவஞ்சேரி, அகரம்தென், மதுரப்பாக்கம் |
| காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியம் | ஆலப்பாக்கம் | வரலட்சுமி மதுசூதனன் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் | ஆலப்பாக்கம், பட்ரவாக்கம், குண்ணவாக்கம், வல்லம், பெரியபொத்தெரி, ஓழலூர், திருவடிசூலம், மேலைமையூர், ஆலப்பாக்கம், புலிப்பாக்கம், செட்டிப்புண்ணியம், பழவேலி |
| காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியம் | சிங்கபெருமாள் கோயில் – ஜி.எஸ்.டி.சாலை | ஆப்பூர். பி.சந்தானம் ஒன்றியச் செயலாளர் | காயிரம்பேடு, கருநீலம், கொண்டமங்கலம், ஆப்பூர், தென்மேல்பாக்கம், அஞ்சூர், சிங்கபெருமாள் கோயில், வெங்கிடாபுரம், கொளத்தூர், ரெட்டிபாளையம், ஆத்தூர், வில்லியம்பாக்கம், பாலூர், வீராபுரம், குருவன்மேடு |
| காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் | கொளப்பாக்கம் – வண்டலூர் – கேளம்பாக்கம் சாலை | து.மூர்த்தி மாவட்ட துணைச் செயலாளர் உதயா கருணாகரன் ஒன்றிய குழு தலைவர் | நெடுங்குன்றம், குமிழி, கொளப்பாக்கம், கீரப்பாக்கம், ஊனமாஞ்சேரி, நல்லம்பாக்கம் பெருமாட்டுநல்லூர் |
| காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் | ஊரப்பாக்கம் – ஜி.எஸ்.டி.சாலை | எம்.டி.லோகநாதன் ஒன்றிய பொறுப்பாளர் | மண்ணிவாக்கம், வண்டலூர், ஊரப்பாக்கம், காரனைப்புதுச்சேரி |
| திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் | நெய்குப்பி ஊராட்சி அனுபுரம் – சட்ராஸ் சாலை | வீ.தமிழ்மணி ஒன்றியச் செயலாளர் | நத்தம் கரியச்சேரி, முள்ளிகொளத்தூர், நல்லூர், சதுரங்கப்பட்டினம், குன்னத்தூர், மனமை, கடும்பாடி, வடகடும்பாடி, எடையூர், பட்டிக்காடு, குழிப்பாந்தண்டலம், எச்சூர், கொத்திமங்கலம், அம்மணம்பாக்கம், நெம்மேலி, ஈச்சங்கரனை, கருமாரப்பாக்கம், தாழம்பேடு, நெய்குப்பி |
| திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் | பொன்விளைந்த களத்தூர் – செங்கல்பட்டு சாலை | வெ.விஸ்வநாதன் மாவட்ட பொருளாளர் ஆர்.டி.அரசு ஒன்றிய குழு தலைவர் | பி.வி.களத்தூர், மணப்பாக்கம், ஒத்திவாக்கம், திருமணி, மேலேரிப்பாக்கம், மோசிவாக்கம், சோகண்டி, அழகுசமுத்திரம், ஆனூர், பொன்பதிர்கூடம், தாலூர், மாம்பாக்கம், தத்தலூர் |
| குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் | படப்பை பஜார் வீதி | படப்பை ஆ.மனோகரன் ஒன்றியச் செயலாளர் | மலைப்பட்டு, சேத்துப்பட்டு, மணிமங்கலம், கரசங்கால், ஆதனூர், மாடம்பாக்கம், காவனூர், ஓரத்தூர், படப்பை, சாலமங்கலம், வைப்பூர், செரப்பணஞ்சேரி, வடக்குப்பட்டு, வட்டம்பாக்கம், நாட்டரசன்பட்டு, வளையக்கரணை, எழிச்சூர், சென்னகுப்பம், |
| குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் | நடுவீரப்பட்டு கலைஞர் திடல் | மு.சுப்பிரமணி ஒன்றிய அவைத் தலைவர் | அமரம்பேடு, நந்தம்பாக்கம், சிறுகளத்தூர், எருமையூர், திருமுடிவாக்கம், நடுவீரப்பட்டு, மலையம்பாக்கம், பூந்தண்டலம் கொழுமணிவாக்கம், சிக்கராயபுரம், கொல்லச்சேரி, பழந்தண்டலம், வரதராஜபுரம், சோமங்கலம் |
| திருப்போரூர் வடக்கு ஒன்றியம் | கேளம்பாக்கம் – ஓ.எம்.ஆர்.சாலை | எல்.இதயவர்மன் ஒன்றியச் செயலாளர் | கேளம்பாக்கம், கானத்தூர், கோவளம், படூர், முட்டுக்காடு, நாவலூர், தையூர், இள்ளலூர், வெண்பேடு, நெல்லிக்குப்பம், மேலையூர் |
| திருப்போரூர் வடக்கு ஒன்றியம் | மாம்பாக்கம் – வண்டலூர் – கேளம்பாக்கம் சாலை | ஜி.சி.அன்புச்செழியன் தலைமை செயற்குழு உறுப்பினர் | மேலக்கோட்டையூர், பொன்மார், சோனலூர், கொளத்தூர், பனங்காட்டுப்பாக்கம், காயார், புதுப்பாக்கம், சிறுசேரி, தாழம்பூர், வெளிச்சை |
| திருப்போரூர் தெற்கு ஒன்றியம் | தண்டலம் பேருந்து நிலையம் | பையனூர் எம்.சேகர் ஒன்றியச் செயலாளர் | திருவிடந்தை, வடநெம்மேலி, நெம்மேலி, பட்டிபுலம், பையனூர், ஆலத்தூர், தண்டலம், சிறுதாவூர், ஆமூர், மானாம்பதி, குன்னப்பட்டு, காரனை, மடையத்தூர் |
| திருப்போரூர் தெற்கு ஒன்றியம் | பெருந்தண்டலம், முள்ளிப்பாக்கம் கூட்ரோடு | இ.திருமலை ஒன்றிய அவைத் தலைவர் | செம்பாக்கம், மைலை, கொட்டமேடு, கீழூர், கரும்பாக்கம், சிறுங்குன்றம், பெருந்தண்டலம், அனுமந்தபுரம், முள்ளிப்பாக்கம், பெரியஇரும்பேடு, தண்டலம், ஓரகடம், பெரியவிப்பேடு, திருநிலை, அருங்குன்றம் |
| திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம் | சுங்குவார்சத்திரம் பேருந்து நிலையம் | எஸ்.டி.கருணாநிதி ஒன்றியச் செயலாளர் | மொளச்சூர், திருமங்கலம், வடமங்கலம், சோகண்டி, காந்தூர், மதுரமங்கலம், சிங்கிலிபாரி, சந்தவேலூர் மேல்மதுரமங்கலம், இராமானுஜபுரம், செல்வழிமங்கலம், சேந்தமங்கலம், கீரநல்லூர், பொடவூர், பாப்பாங்குழி, |
| திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம் | ஓ.எம்.மங்கலம் பேருந்து நிலையம் | ஜெ.சிவபாதம் ஒன்றிய அவைத் தலைவர் | ஓ.எம்.மங்கலம், சிவபுரம், காப்பாங்கோட்டூர், பிச்சிவாக்கம், துளசாபுரம், அக்கமாபுரம், ஏகனாபுரம், எடையார்பாக்கம், கோட்டூர், செல்லம்பட்டிடை, குணகரம்பாக்கம், கன்னந்தாங்கல் |
| திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் | வளர்புரம் அரக்கோணம் சாலை | ந.கோபால் ஒன்றியச் செயலாளர் | செங்காடு, கிளாய், மண்ணூர், நெமிலி, வளர்புரம், தண்டலம், இருங்காட்டுக்கோட்டை, காட்ரம்பாக்கம், கீவளூர், பென்னலூர், மேவலூர்குப்பம், வெங்காடு, பிள்ளைப்பாக்கம், போந்தூர், மாம்பாக்கம் |
| திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் | வல்லக்கோட்டை ஓரகடம் – திருப்பெரும்புதூர் சாலை | இ.மோகனன் ஒன்றிய அவைத் தலைவர் | குண்ணம், எச்சூர், மேட்டுப்பாளையம், வல்லம், மாத்தூர், பண்ருட்டி, வல்லக்கோட்டை, எறையூர், மாகாண்யம், கொளத்தூர், பேரிஞ்சம்பாக்கம், தத்தனூர், பால்நல்லூர் குண்டுபெரும்பேடு |

**எனவே அந்தந்த ஒன்றியக் கழகச் செயலாளர் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பிதழை முறையாக அச்சடித்து, சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து, அந்த ஆர்ப்பாட்டங்களில் ஒன்றியத்தில் உள்ள ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி - மாணவர் அணி - மகளிர் அணி உள்ளிட்ட கழக அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் மற்றும் 100 நாள் வேலைவாய்ப்பில் பணியாற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட அனைவரையும் ஒன்று திரட்டி எழுச்சியாக நடத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்**

**தா.மோ.அன்பரசன்**

**செயலாளர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.**

## 100 நாள் வேலை உறுதித் திட்டத்திற்கு நிதி வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்ட செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!



100 நாள் வேலை உறுதி திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.சு அரசைக் கண்டித்து புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அனைத்து கழக ஒன்றியங்களிலும் 29.03.2025 சனிக்கிழமை காலை 09.30 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெறுகிறது.

| வ.எ | ஒன்றியம் | ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1. | பொன்னமராவதி வடக்கு | காரையூர் |
| 2. | பொன்னமராவதி தெற்கு | பொன்னமராவதி பேருந்து நிலையம் அருகில் |
| 3. | திருமயம் வடக்கு | பனையப்பட்டி |
| 4. | திருமயம் தெற்கு | திருமயம் தாலுகா அலுவலகம் அருகில் |
| 5. | அரிமளம் வடக்கு | அரிமளம் |
| 6. | அரிமளம் தெற்கு | கே.புதுப்பட்டி |
| 7. | அறந்தாங்கி தெற்கு | நாகுடி |
| 8. | ஆவுடையார்கோவில் வடக்கு | ஆவுடையார்கோவில் |
| 9. | ஆவுடையார்கோவில் தெற்கு | கரூர் |
| 10. | மணமேல்குடி வடக்கு | மணமேல்குடி |
| 11. | மணமேல்குடி தெற்கு | கோட்டைப்பட்டினம் |
| 12. | அறந்தாங்கி கிழக்கு | அரசர்குளம் கீழ்பாதி |
| 13. | அறந்தாங்கி மேற்கு | குரூம்பூர் ஒத்தக்கடை |
| 14. | திருவரங்குளம் கிழக்கு | கொத்தமங்கலம் |
| 15. | திருவரங்குளம் மேற்கு | வம்பன் நாலு ரோடு |
| 16. | திருவரங்குளம் தெற்கு | திருவரங்குளம் |

இதில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் முன்னாள்/இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், செயல்வீரர்கள், மாவட்ட, ஒன்றிய, கிளை அணி நிர்வாகிகள் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெற செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எஸ்.ரகுபதி**

செயலாளர், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க.

## கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது செயல்படுத்தப்பட்டது:

# தூர்வாருவதற்கு தொகுதிக்கு ஒரு ஏரியை உறுப்பினர்களுக்கு ஒதுக்குவீர்களா?

### சட்டப் பேரவையில் – சங்கராபுரம் தா.உதயசூரியன் கோரிக்கை!

*சென்னை, மார்ச் 28-*

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது சங்கராபுரம் தொகுதி உறுப்பினர் தா.உதயசூரியன் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது தொகுதிக்கு ஒரு ஏரியை ஒதுக்கி உறுப்பினர்கள் தூர்வாரிக்கொள்ளலாம் என்ற திட்டம் இருந்தது. அது தற்போது செயல்படுத்தப்படுமா என்று கேள்வி எழுப்பினார்.

இது பற்றிய விவாதம் வருமாறு:-



**தா. உதயசூரியன்:** அமைச்சர் அவர்கள், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலகட்டங்களில் மாவட்டந்தோறும் நீர்ப்பாசன கருத்தரங்கு நடத்திய நிகழ்வு உண்டு. அப்படி விவசாயிகள் சொல்கிற கருத்துகளை எல்லாம் ஏற்றுக்கொண்ட அமைச்சர் அவர்கள் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு, ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு எதை விரும்புகிறார்களோ அந்த ஏரியைத் தூர்வாருவதற்கு, அப்போதெல்லம் ஒரு ஏரி வழங்கப்பட்டது. அதேமாதிரி, இப்போது ஏரியைத் தூர்வாருவதற்கு, ஒரு தொகுதிக்கு ஒரு ஏரியை ஒதுக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர் தெரிவித்த அந்தத் திட்டம் தலைவர் கலைஞர் அவர்களின் காலத்திலே கொண்டுவரப்பட்டது. அது ஒரு நல்ல திட்டமாகும். அதில் ஒன்றும் மாறுபட்ட கருத்தல்ல. எனவே, இது குறித்து முதலமைச்சர் அவர்களிடம் பேசி, தேவையென்றால் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் ஜி.வி.சரவணன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி.உரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.திராவிடர் கழகத் துணை பொதுச் செயலாளர் சே.மெ.மதிவதினி, இளம் பேச்சாளர் பூபதி சிறப்புரையாற்றினர். இதில் வினோத்வேலாயுதம், மா.பா.அன்புதுரை, ச.பரமசிவம் ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, சி.எச்.சேகர், மு.மோகன், வரவை.தா.பாரி உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் பகுதி இளைஞர்அணி துணை அமைப்பாளர் கே.அருண்குமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, தலைமையில் பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் திராவிடர் கழக துணை பொதுச்செயலாளர் மதிவதனி சிறப்புரையாற்றினார். மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் இரா.லட்சுமணன், என்.மருதுகணேஷ், நேதாஜி யு.கணேசன் எம்.சி, ஏ.டி.மணி, வெ.சு.சத்தியநாராயணன், ப.சோமசுந்தரமூர்த்தி, ஜி.ஏழுமலை, இ.மணிமேகலை எம்.சி, மேலும் மு.நரேஷ்குமார் தலைமையில் 20–க்கும் மேற்பட்டோர் அ.இ.அ.தி.மு.க. கட்சியிலிருந்து திமுகவில் இணைத்து கொண்டனர். த.அஜித்குமார், என்.சாகிள், ஆகியோர் நன்றி கூறினர்.